மதிப்பீடு

## படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

அ. சரியான விடையைத் தெரிவு செய்து எழுதுக.

1. நம் முன்னோர்கள் ஒரு சொல்லைச் சொல்லியவாறே நாமும் சொல்வது ________

அ) பழைமை ஆ) புதுமை இ) மரபு ஈ) சிறப்பு

2. யானை ________

அ) கத்தும் ஆ) பிளிறும் இ) கூவும் ஈ) அலறும்

3. ஆந்தை அலறும் – என்பது ________

அ) ஒலிமரபு ஆ) வினைமரபு

இ) இளமைப் பெயர் மரபு ஈ) இருப்பிடப் பெயர் மரபு

4. புலியின் இளமைப் பெயர் ________

அ) புலிப்பறழ் ஆ) புலிக்குட்டி இ) புலிக்கன்று ஈ) புலிப்பிள்ளை

5. பூப் பறித்தாள் – என்பது ________

அ) வினைமரபு ஆ) பெயர் மரபு

இ) ஒலி மரபு ஈ) இளமைப் பெயர் மரபு

ஆ. உரிய மரபுச் சொற்களை நிரப்புக.

எ.கா. நெசவாளர் ஆடை நெய்தார் (நெய்தார் / செய்தார்)

1. நாய் ________ (கத்தும் / குரைக்கும்) சத்தம் கேட்டது.

2. ஆடு தன்னுடைய ________ (குட்டியைத் / கன்றைத்) தேடியது.

3. தாகத்திற்குத் தண்ணீர் ________ (குடித்தான் / பருகினான்)

4. புலி குரங்கைப் பார்த்து ________ (பிளிறியது / உறுமியது)



LIVEWORKSHEETS